# புனித வார திருவழிப்பாட்டுக் கைபேடு



தொகுப்பு

அருட்பணி. **செ. ஆரோக்கியராஜ்,** SdC

குவனெல்லிய
பதிப்பகம்

-: வெளியீடு :-

**குவெனல்லிய பதிப்பகம்**

**குவனெல்லா கலை மற்றும் செய்தி தொடர்பகம்**

சாமுப்பிள்ளை நகர், கடலூர்–1.

Ph : 04142-296788 / 98434 19588
guanellacommunicationcentre@gmail.com
www.guanellaindia.com

# பொருளடக்கம்


✝ குருத்து ஞாயிறு - 01

✝ புனித வியாழன் - 08

✝ புனித வெள்ளி - 13

✝ உயிர்ப்பு பெருவிழா - 16

(பாஸ்கா திருவிழிப்பு வழிபாட்டு நிகழ்ச்சிகள்)

✝ உயிர்ப்பு ஞாயிறு திருப்பலி - 22

**<u>புனித வார பாடல்கள்</u>**

✝ குருத்து ஞாயிறு பாடல்கள் - 23

✝ புனித வெள்ளி பாடல்கள் - 26

✝ உயிர்ப்புப் பெருவிழா பாடல்கள் - 29

# குருத்து ஞாயிறு

## குருத்தோலைப் பவனி

**முன்னுரை :**

வாழ்க்கையெனும் பேருந்தில்,
பயணியாகப் பயணம் செய்யும்,
மனிதா!
நீ ஒரு சாதாரண மனிதன்!
உன் பயணம் சுகமாய் இருந்தால் ....
நீ ஒரு மறு கிறிஸ்து!
உன் பயணம் கரடுமுரடாய் இருந்தால் ....
உன் வாழ்க்கையும்,
உன் பயணமும்,
உன் கையில்.....
யோசித்துப் பார் இதில்
நீ எந்த வகையென்று?

**அன்பார்ந்த இறைமக்களே!**

இன்று நாம் குருத்து ஞாயிறைக் கொண்டாடுகின்றோம். புனித வாரத்தின் நுழைவுவாயில் குருத்து ஞாயிறு. தவக்காலத்தின் உச்சக்கட்டமும், திருப்பாடுகளின் தொடக்கமும் குருத்து ஞாயிறு ஆகும். மேலும் இன்றைய திருவழிபாடு இருபெரும் பகுதிகளைக் கொண்டது. முதலாவது, குருத்தோலைப்பவனி. இரண்டாவது திருப்பலி.

அன்பார்ந்தவர்களே! இயேசுவின் ஒட்டுமொத்த வாழ்க்கையை ஒரு இலட்சியப்பயணம் என்று கூறலாம். எவ்வாறெனில், இவரது வாழ்வு, இவருடைய கலிலேயா பணி வாழ்வில் தொடங்கி, எருசலேம் நகர் நுழைவு வரை ஒரு பயணமாக அமைகிறது.

இப்பயணம் மாபெரும் திட்டத்துடனும், இலட்சியத்துடனும் நடைபெற்ற சிறப்புமிக்க பயணம் என்று சொன்னால் அது மிகையாகாது. உலக வரலாற்றுச் சுவடுகளைச் சற்று திரும்பிப் பார்க்கையில் நமக்கு மிக முக்கியமான இரு மாபெரும் பயணங்கள் ஞாபகத்திற்கு வரும். அதில் முதலாவது, சீனாவின் தந்தை மாசேதுங் நடத்திய மரண யாத்திரை, இரண்டாவது மகாத்மா காந்தி நடத்திய தண்டி யாத்திரை ஆகும். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக இயேசுவின் எருசலேம் திருப்பயணம் விவிலிய முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனென்றால் மக்கள் அனைவரும் மீட்பு பெறவும், தன்னை

விண்ணுலக அரசன், வாக்களிக்கப்பட்ட மெசியா என வெளிப்படையாகக் கூறும் பயணம்தான் இந்த எருசலேம் திருப்பயணம்.

தந்தையின் மீட்புத் திட்டத்திற்குக் கீழ்ப்படிந்து சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்குத் தன்னையே தாழ்த்திக் கொண்டு, எதற்கும் பயப்படாமல் மிகவும் துணிச்சலுடன், அமைதியின் ஆட்சியை நிலைநாட்ட அமைதியின் அரசனாய் கழுதையின் மேல் அமர்ந்து திருப்பவனியாய் வருகையில், மக்கள் அனைவரும் குருத்தோலைகளைக் கையில் ஏந்தி ஓசான்னா கீதம் பாடி ஆர்ப்பரித்து, தங்களுடைய ஆடைகளை வழியில் விரித்து புதிய அரசை வரவேற்ற பயணம் தான் இந்த எருசலேம் திருப்பயணம். இது மானுடத்தையே மாற்றியமைத்த புரட்சிப் பயணம்.

எனவே நாமும் இந்த மாபெரும் பயணத்தை நினைவுக்கூர்ந்து இந்தக் குருத்தோலைப் பவனியில் பக்தியோடு, ஓசான்னா கீதம் பாடி இறைமகன் இயேசு கிறிஸ்துவைப் போற்றுவோம், புகழ்வோம் அவருடைய அருளைப் பெறுவோம்.

## திருப்பலி முன்னுரை

**அன்புமிக்க இறை சமூகமே!**

இன்றைய வாசகங்கள் மற்றும் நற்செய்தியானது இயேசு கிறிஸ்துவின் திருப்பாடுகளின் வரலாற்றை அறிவிக்கின்றன. குறிப்பாக, இத்திருப்பாடுகளின் வழியாக நமதாண்டவர் இயேசு கிறிஸ்து. மூன்று மிக முக்கிய வாழ்வியல் உண்மைகளை நமக்கு எடுத்துரைக்கிறார். முதல் வாழ்வியல் உண்மையாக, நாமெல்லாம் ஒரு நாக்கு கொண்டு ஒரே மனநிலையில் வாழ அழைப்பு விடுக்கிறார். அதாவது, இறைமகன் இயேசு கிறிஸ்துவை மக்கள் அனைவரும் ஓசான்னா கீதம் பாடி போற்றும் போது, அவர் மகிழ்ச்சியின் உச்சிக்குச் செல்லவில்லை. அதேபோல் மக்கள் அனைவரும் ஒழிக என்று சாடிய பொழுதும் துன்பத்தின் உச்சநிலைக்குப் போகவில்லை மாறாக, இவை இரண்டினையும் ஒரே மனநிலையில் எடுத்துக் கொண்டார். இரண்டாவது வாழ்வியல் உண்மையாக, கசக்கும் துன்பத்தையும் குணமளிக்கும் மருந்தாக ஏற்றுக் கொள்ளுதல் ஆகும். இந்த மண்ணுலக வாழ்க்கை வெறும் பஞ்சு மெத்தை அல்ல! மாறாக, கரடு முரடான பாதைகளையும், கசப்பான அனுபவங்களையும் உள்ளடக்கியது.

மூன்றாவது வாழ்வியல் உண்மையாக, குறிக்கோள் கொண்ட இலட்சிய வாழ்வு வாழ்தல் ஆகும். குறிக்கோள்கள் இல்லாத வாழ்க்கை துடுப்பில்லாத படகுக்குச் சமம் என்பார்கள். எவ்வாறெனில் இயேசுவின் பிறப்பு, பெறும் புதுமைகள் பல செய்வதிலும், இறையாட்சியைப் பற்றி பறைசாற்றுவதிலும் நின்றுவிடாமல், அவர் குறிக்கோளாகக் கொண்டிருந்த சிலுவைச் சாவை மையப்படுத்தி அவருடைய வாழ்வும், பணியும் அமைந்திருந்தது. எனவே தான் சிலுவைச் சாவைக் கண்டு பயப்படாமல் ஒரு வீரமகனாகக் குறிக்கோளை அடைந்தார். எனவே நாமும், நம்முடைய வாழ்க்கையில் இறைமகன் இயேசு கிறஸ்து வாழ்ந்து காட்டிய மூன்று வாழ்வியல் உண்மைகளைக் கடைபிடிக்க, அதாவது, பிறரைப் பற்றி புறம் பேசாமலும், முகத்திற்கு முன் ஒரு பேச்சும், முதுகுக்குப் பின் ஒரு பேச்சும் பேசாமலும் வாழ்வோம். துன்பம் நம் வாழ்க்கையை வலிமைப்படுத்தும், முதிர்ச்சிபடுத்தும், பிறகு மாட்சிப்படுத்தும். எனவே துன்பத்தை அன்புடன் ஏற்றுக் கொள்ளவும், குறிக்கோள் கொண்ட வாழ்க்கை வாழவும், இக்கல்வாரிப் பலியில் தொடர்ந்து செபிப்போம். நம்முடைய வாழ்க்கைக்கு மனுவுரு கொடுப்போம்.

## வாசக முன்னுரைகள்:

### முதல் வாசக முன்னுரை: எசாயா 50:4-7

ஆண்டவரின் உண்மையான ஊழியன், கடவுளின் வார்த்தைகளுக்குச் செவிக்கொடுத்துக் கேட்டு, அவ்வார்த்தைகளை மக்களுக்கு எடுத்துரைத்து, கடவுள் வழி வாழ ஊக்குவிப்பதாகும். அவ்வாறு நீங்கள் கடவுளின் உண்மையான ஊழியனாக திகழும்போது நேரிடும் துன்பங்கள், இழிவுகளைக் கண்டு கலக்கமுற வேண்டாம். ஏனென்றால் கடவுளின் துணை என்றும் அவர்களோடு இருக்கும் என இறைவாக்கினர் எசாயா கூறும் முதல் வாசகத்திற்குக் கவனமுடன் செவி மடுப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை : பிலிப்பியர் 2:6-11

இறைமகன் இயேசு கிறிஸ்து நம்மை மீட்பதற்காகக் கடவுள் தன்மையை இழந்து மனுவுரு எடுத்தார். இது தாழ்ச்சியென்னும் புண்ணியத்தின் வெளிப்பாடு. தந்தையின் விருப்பப்படி கேவலமான

சாவு எனக் கருதப்பட்ட சிலுவைச் சாவினை ஏற்றுக்கொண்டார். இது கீழ்படிதலெனும் புண்ணியத்தின் வெளிப்பாடு. எனவே, கிறிஸ்துவர்களாகிய நாமும் கிறிஸ்துவின் மனநிலையையும் இவ்விரு புண்ணியங்களையும் பெற்று வாழ, அழைப்பு விடுக்கும் இரண்டாம் வாசகத்திற்கு பக்தியோடு செவி மடுப்போம்.

## மன்றாட்டுகள்

**1. திருச்சபையை உருவாக்கிய எம் இறைவா!**

எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் மற்றும் பொதுநிலையினர் அனைவரும், காலத்தின் சூழ்நிலைக்கு ஏற்ப நற்செய்தியை அனைத்து மக்களுக்கும் அறிவித்து இயேசுவின் பக்கம் எல்லா மக்களையும் ஈர்த்திட வேண்டிய ஆற்றலைத் தரும்படி இறைவா உம்மை வேண்டுகிறோம்.

**2. அரசர்களுக்கெல்லாம் அரசராகிய இறைவா!**

நாட்டை ஆளும் தலைவர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை நல்வழியில் நடத்திடவும், இவர்கள் தங்களின் தன்னலத்தை துறந்து மக்களின் வாழ்வாதாரங்களுக்கு முன்னுரிமைக்கொடுத்து வாழ்ந்திட நல் உள்ளத்தைத்தர வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**3. நம்பிக்கையின் நாயகனாகிய இயேசுவே!**

எங்கள் இளைஞர்கள் இன்றைய நவீனத் தொடர்புச் சாதனங்களில் அதிகம் மூழ்கி, விசுவாசம், பக்தி, சமூக அக்கறை ஆகியவற்றை மறந்து வாழும் நிலையிலிருந்து விடுபட்டு, உமது அன்பினை உணர்ந்து வாழ அருள் புரியும்படி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**4. நிலை வாழ்வளிக்கும் எம் இறைவா!**

குருத்தோலை ஞாயிறை சிறப்பிக்கும் நாங்கள் உம்மைப்போன்ற எல்லாவிதத் துன்பங்களையும் சந்தித்து வெற்றி கொள்ளவும், குறிப்பாக ஏழ்மை, நோய்கள் போன்ற துன்பங்களிலிருந்து விடுபடவும் அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**5. இரக்கத்தின் இறைவா!**

உலகச் செல்வங்களின் மீது பற்றுக்கொண்டு நிலைவாழ்வை இழந்துவிடாமல் என்றும் விண்ணுக்குரியவை மீது நாட்டம் கொண்டு

எங்கள் வாழ்வைப் பாதுகாத்துக் கொள்ள மன உறுதியைத் தரும் படி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## மறையுரை

**கிறிஸ்துவில் பிரியமான இறைமக்களே!**

குருத்து ஞாயிறு என்பது பெருவிழா உலக வரலாற்றிலும், விவிலிய வரலாற்றிலும் முக்கியத்தும் வாய்ந்தது. எனவே நாம் இந்த குருத்து ஞாயிறை அர்த்தமுள்ளதாக மாற்றுவதற்கு, குருத்து ஞாயிறு அன்று பயன்படுத்தும் அடையாளங்களின் வழியாக கூறும் செய்தியைத் தெள்ளத்தெளிவாக அறிந்து கொள்வதும் அதன்வழி நம் வாழ்வை அமைப்பது சாலச்சிறந்தது.

**ஓசான்னா கீதம்**

மக்கள் அனைவரும் ‘‘ஓசான்னா கீதம்’’ பாடி இயேசுவைப் புகழ்ந்ததை மூன்று நற்செய்தியாளர்களும் கூறுகிறார்கள். (மத் 21:9, லூக் 11:9?10 யோவான் 12 : 13) ‘ஓசான்னா’ எனும் சொல் திருப்பாடல் 118:25 இருந்து எடுக்கப்பட்டுள்ளது. அதாவது, ‘‘ஆண்டவரே மீட்டருளும், ஆண்டவரே வெற்றி தாரும்’’ என்பதே ‘ஓசான்னா என்று உருவெடுத்தது, ஓசான்னா என்னும் சொல் நாளடைவில் ‘நல்வரவினை வாழ்த்துக் கூறி ஆராவாரம் செய்’ என்று பொருள் கொணர்ந்தது. ஆன்மீக ரீதியாக இச்சொல் கூறும் பொருள் கடவுளைப் போற்றிடுவோம், வாழ்த்திடுவோம், வழிபடுவோம், பயபக்தியோடு மரியாதை செலுத்துவோம் என்பவை ஆகும். இந்த ஓசான்னா கீதம் குருத்து ஞாயிறன்று முக்கிய பங்கு வகிக்கின்றது. ஏனெனில் மக்கள் அனைவரும் இறைமகன் இயேசு கிறிஸ்துவை ‘தாவீதின் மகனுக்கு ஓசான்னா’ என்று போற்றினர் (மத் 21:9)

**குருத்தோலை**

ஏன் நாம் குருத்தோலை ஏந்த வேண்டும்? இதனுடைய அர்த்தம் என்ன? என்று சிந்திக்கையில், நமக்குப் பழைய ஏற்பாட்டில் மக்கபேயர் 13 : 15 லிருந்து ஒரு சான்று கிடைக்கிறது. அதாவது, இஸ்ரயேலின் பெரும் பகைவன் அழிக்கப்பட்டதாலும் மக்கள் அனைவரும் புகழ் பாக்களாலும், நன்றிப்பாக்களாலும், பாடிக்கொண்டு, குருத்தோலை

பிடித்துக் கொண்டு யாழ், கைத்தாளம், சுரமண்டலம், ஆகிய இசைக்கருவிகளை மீட்டிக் கொண்டும் யூதர்கள் கோட்டைக்குள் நுழைந்தார்கள். மேலும் குருத்தோலை என்பது ஒரு வெற்றியின் அடையாளம் ஆகும். எவ்வாறெனில், ராணுவச் சாதனைப் புரிந்தாலும், ரோமானிய விளையாட்டில் வெற்றி பெற்றாலும் அவர்களுக்குக் குருத்தோலை வழங்கி பெருமைப்படுத்துவது வழக்கம் ஆகும். இதைத்தான் அன்றைய யூதமக்கள் இயேசுவின் பணிவாழ்வின் வெற்றியை குருத்தோலை கையில் ஏந்தி, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவைப் பெருமைப்படுத்தினார்கள்.

**கழுதை**

இந்தக் குருத்தோலை ஞாயிறு விழாவைப்பற்றி முன்னதாகவே இறைவாக்கினர் எசாயா 62:11 மற்றும் செக்கரியா 9:9 லிருந்தும் கூறப்பட்டுள்ளது. மேலும் இவ்விரு பகுதிகளை இணைத்து மத் 21:5 மிகத் தெளிவாக பதிவு செய்கிறது. அதாவது, மகள் சீயோனிடம் சொல்லுங்கள், இதோ உன் அரசர் உன்னிடம் வருகிறார். அவர் எளிமையுள்ளவர், கழுதையின் மேல் ஏறி வருகிறார். கழுதைக் குட்டியாகிய மரியின் மேல் அமர்ந்து வருகிறார் என்று இறைவாக்கினர் உரைத்தது நிறைவேறவே இவ்வாறு நிகழ்ந்தது. இங்கு மகள் சீயோன் என்ற உருவம் எருசலேமைக் குறிப்பிடுகிறது. மேலும் விவிலிய வரலாற்றில் கோவேறு கழுதையின் மேல் வருவது என்பது அரசத் தன்மையை வெளிப்படுத்துகிறது. அதாவது புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசன் மக்கள் முன்னிலையில் கோவேறுக் கழுதையின் மேல் ஊர்வலம் வருவது வழக்கம். இதைத்தான் நாம் பழைய ஏற்பாட்டில் 1 அரசர் 1: 33?38ல் பார்க்கின்றோம். தாவீது அரசன் தன் மகன் சாலமோனைப் புதிய அரசனாக திருப்பொழிவு செய்வதற்கு அடையாளமாக கோவேறுக் கழுதையின் மேல் அமர்த்தி ஊர்வலமாக செல்வதை நாம் காண்கின்றோம்.

**மக்கள் தங்களது மேலுடைகளை வழியில் விரித்தார்கள்.**

நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து பவனியாக தனது சீடர்களோடு கழுதையின் மேல் வரும்பொழுது மக்கள் அனைவரும் தனது மேலுடைகளை கழற்றி வழியில் விரித்தார்கள். வேறு சிலர் மரங்களின் கிளைகளை வெட்டி வழியில் பரப்பினார்கள். இதே செயலைப் பழைய ஏற்பாட்டில் 2 அரசர் 9 : 12?13?ல் வாசிக்கலாம். அதாவது ஏகூவை அரசனாக இஸ்ரேயலுக்கு திருப்பொழிவு செய்கிறேன் என்று கடவுள்

சொன்னவுடன் மக்கள் அனைவரும் தன் போர்வையைக் கழற்றி, அவற்றை வெறுமையாய் இருந்த படியில் விரித்து எக்காளம் ஊதி ஏகூவே அரசர்! என்று முழங்கினர். இம்முறையை இன்றளவும் மக்கள் அரசனுக்கும் மாபெரும் அரசியல்வாதிக்கும் மற்றும் நாட்டு அதிபர்களுக்கும் கௌரவப்படுத்தும் விதமாகச் சிவப்புக் கம்பளம் விரித்து அவர்களை வரவேற்பது வழக்கமாக உள்ளது. இந்த செயலைத்தான் அன்றைய யூதர்கள் இயேசுவுக்கு மரியாதை செலுத்தும் வண்ணமாக தங்களது உடைகளையும் மரக்கிளைகளையும் வழியில் விரித்தார்கள்.

### குருத்தோலைப் பவனி

பண்டையக் காலத்தில் போரில் வெற்றிப்பெற்ற அரசன் அல்லது நாட்டை கைப்பற்றிய அரசன் தனது வெற்றியின் வெளிப்பாடாக பூ மாலைகளாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்ட இரதத்தில் அமர்ந்தபடி அல்லது பொலிவு குதிரையின் மேல் அமர்ந்தபடி, தனது போர்வீரர்களின் ஆயுதங்கள் தாங்கிய அணிவகுப்போடும், மகிழ்ச்சியோடும் கம்பீர ஊர்வலத்தை அல்லது பவனியை நகர மக்கள் காணும்படி செல்வது வழக்கம். இப்பழக்கம் யூதர்கள் மத்தியிலும் நிலவியது.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து இந்த குருத்தோலைப் பவனியாகச் செல்வதன் மூலம் 'நானும் வெற்றியின் அரசன்' என்று கூறுகிறார். ஆனால் இயேசு கிறிஸ்து இரதத்திற்குப் பதிலாக கழுதையும், போர்வீரர்களுக்குப் பதிலாக சீடர்களும், ஆயுதங்களுக்குப் பதிலாக குருத்தோலையும் ஏந்தி தனது குருத்தோலைப் பவனியை நடத்தினார். இங்கு ஆண்டவர் இயேசு அரசனாக வெற்றியை கொண்டாடுவது நாட்டைக் கைப்பற்றியதற்கு அல்ல! மாறாக அவருடைய பொது வாழ்விலும், பணி வாழ்விலும் பெற்ற வெற்றியின் சின்னமாகும். அதாவது, நோயாளிகளைக் குணப்படுத்தியது, பேய்களை ஓட்டியது, மற்றும் இறையாட்சி விழுமியங்களை அறிவித்தது ஆகும்.

எனவே, நாமும் நம்முடைய நல்வாழ்வின் மூலம் இம்மாபெரும் வெற்றியின், அமைதியின் அரசராகிய இயேசு கிறிஸ்துவைப் போற்றுவோம், புகழ்வோம். அவர் கற்றுக்கொடுத்த விழுமியங்களைப் பிறருக்கு எடுத்துரைப்போம் ஆமென்.

## புனித வியாழன்

**திருப்பலி முன்னுரை:**

இன்று நாம் புனித வியாழன் என்னும் திருவழிப்பாட்டுக் கொண்டாட்டத்தை சிறப்பிக்கின்றோம். இந்தப் புனித வியாழன் பல இறைவெளிப்பாட்டு உண்மைகளை நமக்கு வெளிக்காட்டுகிறது. இதை என் நினைவாகச் செய்யுங்கள் என்பது, தான் அழைத்த சீடர்களுக்கு மீண்டும் பணி செய்ய அதிகாரம் கொடுத்த குருத்துவ விழாவை நிருபிக்கிறது. நான் உங்களை அன்பு செய்தது போல நீங்களும் ஒருவருக்கொருவர் அன்பு செய்யுங்கள் என்று கூறி அழைக்கப்பட்ட ஒவ்வொரு கிறிஸ்தவனும், தனிமனிதனல்ல, மாறாக மற்றவரை அன்பு செய்யக் கடமைப்பட்டவன் என்பதை கூறுகிறது. சீடர்களின் கால்களைக் கழுவுதல், மூலம் இயேசுவை முன்மாதிரியாகக் காட்டி ஒவ்வொரு கிறிஸ்துவனும் பணிபுரிய அழைக்கப்படுகிறான்/றாள் என்பதை நிரூபிக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக இது என் உடல், எனது இரத்தம் என்று இயேசு பகிர்ந்தளித்த போது அவர் தம்மையே மானிட சமுதாயத்திற்கு பகிர்ந்தளித்த பேரன்பை வெளிக்காட்டுகிறது. எனவே நற்கருணை, குருத்துவம், பணிவிடை மூன்றும் இணைந்தே செல்கின்றன என்பதை உணர்ந்தவர்களாய் இப்பலியில் பங்கேற்று, பிறரன்புப் பணிகளில் ஈடுபடுவோம். இன்றைய வழிபாடானது நான்கு பகுதிகளைக் கொண்டதாக அமைந்திருக்கிறது.

1. இறைவார்த்தை வழிபாடு
2. பாதம் கழுவும் சடங்கு
3. நற்கருணை வழிபாடு
4. நற்கருணை பவனி

இவற்றை தியானித்தவர்களாய் இத்தெய்வீகத் திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

### வார்த்தை வழிபாடு

**முதல் வாசக முன்னுரை**

பாஸ்கா விழாவை எவ்வாறு கொண்டாட வேண்டும் என்று இன்றைய முதல் வாசகம் கூறுகிறது. இஸ்ரயேல் மக்கள் விடுவிக்கப்படும் நேரம் வந்ததும், அவர்கள் கடைசி உணவைத் திட்டமிட்டு பாஸ்காவாகக் கொண்டாடினார்கள். குடும்பத்திற்கு ஓர் ஆடு என்று தேர்ந்தெடுத்து பாஸ்காவைக் கொண்டாடி விடுதலைப்பெற்றனர் என்று கூறும் இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை:

புதிய இஸ்ரயேல் மக்களுக்கு இயேசு தம்மையே ஒரு செம்மறி ஆடாகப் பலியாக்கினார். பழைய ஏற்பாட்டில் வீட்டிற்கு ஓர் ஆடு என்று தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆனால் இங்கே உலகத்திற்கே ஓர் ஆடாய், உலகப் பாவம் போக்கும் செம்மறியாய், இயேசு தம்மையே மனிதரிடத்தில் ஒப்படைத்துப் புதிய பாஸ்காவை கொண்டாடுகிறோம் என்று கூறும் இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

# பாதம் கழுவும் சடங்கு

## முன்னுரை :

நாம் பிறருக்கு ஒன்றைக் கற்பிக்க அல்லது அறிவிக்க வேண்டுமெனில் நமது வார்த்தைகளால் அல்ல; மாறாக நம் செயல்களால் கற்பிப்பதே சாலச் சிறந்ததாகும். அவ்வகையில் நம் பெருமான் இயேசு கிறிஸ்து, உயரியக் கொடையாம் “தாழ்ச்சி” என்னும் கொடையை நமக்கு அறிவிக்கவே தன் இறப்பிற்கு முன்னர் தன் பணியாளர்கள் பாதங்களைக் கழுவுதல் என்ற நிகழ்வினை நிகழ்த்தி அதன் மூலம் அவரின் வழித்தோன்றல்களாகிய நாமும் சிறந்த தலைவராக அல்ல மாறாக, சிறந்த பணியாளர்களாகவே வாழ்ந்திட நம்மை அழைக்கின்றார். அந்த அழைப்பினை ஏற்றவர்களாய், பக்தியோடு இச்சடங்கில் பங்கெடுப்போம்.

## மறையுரை

நற்கருணை, குருத்துவம், பணிவிடை இவை மூன்றும் இணைந்து செல்கின்றன. நற்கருணையில் நாம் பங்கெடுப்பதால் நாம் அவரோடு ஒன்றாகிறோம். நாம் அவரோடு ஒன்றாவதால் அவரது பணியில் பங்கு பெறுகிறோம். அவரது பணியில் பங்கு பெறுவது தேவையில் இருக்கும் நமது சகோதர சகோதரிகளுக்கு அன்புப்பணி புரிவதில் வெளிப்பட வேண்டும் என்பதே இன்றைய மையக்கருத்து.

## குருவும், பணிவாழ்வும்:

? மக்கள் போராட்டத்தில் பங்கேற்ற துறவியைப் பார்த்துப் “பூசையை வச்சமா, நற்கருணையைக் கொடுத்தமா, பள்ளிக்கூடத்தை நடத்தினமா, என இல்லாமல் பெரிய சமூக சேவகர்னு நினைப்பு” நம்மில் பலர் இத்தகைய மனப்பான்மையையே கொண்டுள்ளோம். ஆனால் இயேசுவோ தன் தந்தையிடம் செல்ல வேண்டிய நேரம் வந்ததும், தம்

சீடர்களுக்கு ஒரு சிறந்த படிப்பினையை அவர்கள் கால்களைக் கழுவுவதன் மூலம் கற்பிக்கின்றார். இத்தகைய பணிதான் திருச்சபை அதிகாரிகளிடம் இருக்க வேண்டியது. குருத்துவத்தையும், பணிவிடையையும் பிரிக்க முடியாது என்பதற்கு இது ஓர் அடையாளம்.

**நற்கருணையும், பணிவாழ்வும்:**

நற்கருணை இறைவனின் அன்புப் பிரசன்னத்தை வெளிப்படுத்துகிறது. தனது விலைமதிப்பில்லாத உடலாலும், இரத்தத்தாலும் நம்மை மீட்டெடுத்த இறைவனின் நிபந்தனையற்ற அன்பின் சின்னமாய் விளங்குகிறது. இது எனது உடல், எனது இரத்தம் என்று பகிர்ந்தளிக்கின்ற போது அவர் தம்மையே மானிட சமுதாயத்திற்குப் பகிர்ந்தளித்த பேரன்பை வெளிக்காட்டுகிறது. அன்னை தெரசாவிடம் ஒருவர், “உங்களால் எப்படி இந்தப் பணிகளைச் செய்ய முடிகின்றது? என்று கேட்டபோது அவர் நற்கருணையில் இருக்கும் இறைவனைக்காட்டி, “நற்கருணையால் பணிவாழ்வைச் செய்ய முடிகிறது” என்று கூறினாராம்.

**அன்புக்கட்டளையும், பணிவாழ்வும்:**

ராபர்ட்டுக்கும் ராணிக்கும் திருமணமாகி பத்து வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால் அவர்கள் வாழ்க்கை ஒவ்வொரு நாளும் போராட்டம் தான். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காமல் சண்டைபோடுவர். ஆனால் இருவரும் ஞாயிற்றுக்கிழமை திருப்பலியில் பங்கு கொள்வதில் தவறமாட்டார்கள். பழிக்குப்பழி என்பது பழைய கட்டளை. ஆனால் இயேசு ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் என்கிறார்.

## மன்றாட்டுக்கள்

1. நற்கருணையின் நாதரே! தாய் திருச்சபைக்காக வேண்டுகிறோம். சிறப்பாகத் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், பொதுநிலையினர் ஆகியோருக்காக மன்றாடுகிறோம். இவர்களை நிறைவாய் ஆசிர்வதித்து, இறைவார்த்தையின்படி வாழவும், மக்களை உம்மிடம் அழைத்து வர தேவையான அருளை தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மிடம் மன்றாடுகின்றோம்.

2. என்றென்றும் குருவான இறைவா! இந்த நல்ல நாளில் குருக்கள் அனைவருக்காகவும் மன்றாடுகிறோம். குறிப்பாக

எங்களுக்கு ஞானஸ்நானம், உறுதிப்பூசுதல், நற்கருணை போன்ற அருட்சாதனங்கள் மூலம் கடவுளின் அருளைப் பெற்றுத்தந்த அனைத்துக் குருக்களையும் நீர் ஆசிர்வதித்து, அவர்களது கரங்களைக் கறைபடாமல் காத்தருள வேண்டுமென்று, இறைவா உம்மிடம் மன்றாடுகின்றோம்.

3. அன்பே உருவான இறைவா! புதியதொரு அன்புக் கட்டளையைக் கொடுத்த இந்த நல்ல நாளில், இங்குக் கூடியிருக்கும் அனைவருக்காகவும் வேண்டுகிறோம். நாங்கள் முதலில் எங்களை அன்பு செய்து அந்த அன்பின் வெளியடையாளமாக எங்கள் அயலாரை அன்பு செய்ய வேண்டுமென்று, இறைவா உம்மிடம் மன்றாடுகின்றோம்.

4. அன்பு தெய்வமே! தேர்வினை எழுதிக்கொண்டிருக்கும் மாணவ, மாணவியருக்காக மன்றாடுகிறோம். கற்றவை அனைத்தையும் நினைவில் கொண்டு, அவற்றை நல்ல முறையில் எழுத தேவையான ஞாபக சக்தியைத் தர வேண்டுமென்று, இறைவா உம்மிடம் மன்றாடுகின்றோம்.

5. “பணிவிடை பெற அல்ல பணிவிடை செய்யவே வந்தேன்” என்று கூறிய எம் இறைவா! உலகமெங்கும் உம்மைப் பின்பற்றி அன்புப் பணியை ஆற்றிக் கொண்டிருக்கும் அனைத்துத் துறவற சபைகளுக்காக வேண்டுகிறோம். நீரே அவர்களுக்குத் தேவையான ஆற்றலையும், அருளையும் பொழிய வேண்டுமென்றும், அன்புப் பணியை செய்ய மேலும் பல உள்ளங்கள் முன்வரவேண்டியும், இறைவா உம்மிடம் மன்றாடுகின்றோம்.

## நற்கருணை வழிபாடு

### முன்னுரை

அன்பார்ந்தவர்களே! கிறிஸ்தவர்களாகிய நம்முடைய வாழ்வின் மையம் நற்கருணை ஆகும். இறந்து உயிர்த்த இயேசு கிறிஸ்து, என்றும் நம்மோடு தம் உடனிருப்பை உணர்த்துவதற்காக நமக்காக விட்டுச் சென்ற உயரிய கொடையே நற்கருணை ஆகும். இந்த நற்கருணை வழியாகவே என்றும் நம்மோடு உறவாடுகின்றார், நம் அன்பு தெய்வம் இயேசு கிறிஸ்து. தனது உடலையும் இரத்தத்தையும் தியாகத்தின் அடையாளமாகக் கொடுத்து நம்மையும் இந்த நற்கருணை

வழிபாட்டின் வழியாக தியாக உணர்வோடு வாழ அழைக்கின்றார் என்ற ஆழ்ந்த நம்பிக்கையோடு இந்த நற்கருணை வழிபாட்டில் பக்தியோடு பங்கெடுப்போம்.

(குறிப்பு: வழக்கம் போல் திருப்பலி நடைபெறும்)

## <u>நற்கருணை ஆராதனை (மாதிரி)</u>

- ❖ அன்பின் தேவ நற்கருணை ? (பாடல்)
- ❖ நித்திய ஸ்துதிக்குரிய ? 3
- ❖ பிதாவுக்கும், சுதனுக்கும் ?3 (குரு)

### விண்ணப்பங்களும் செபங்களும்

**குரு :** நற்கருணையில் வீற்றிருக்கும் எங்கள் அன்பு ஆண்டவரே நீர் குருத்துவத்தை ஏற்படுத்திய இந்த நன்நாளிலே உமது தூய திருச்சபைக்காகவும் அதன் தலைமைப்பணியாளராம் எங்களது திருத்தந்தைக்காகவும், அவரின் உடன் பணியாளர்களாம் கர்தினால்மார்கள், ஆயர்கள், குருக்கள் மற்றும் கன்னியர்கள் அனைவருக்காகவும் மன்றாடுகிறோம். இறைவா! அவர்கள் அனைவரும் உமது குருத்துவத்தின் மகத்துவத்தை உணர்ந்தவர்களாய் வாழ்ந்திட அருள்புரியும்.

மேலும், இறைவா உலக அமைதிக்காகவும், ஒற்றுமைக்காகவும் நாங்கள் உம்மை மன்றாடுகின்றோம். இவ்வுலகில் தீவிரவாதம் முற்றிலும் ஒழிந்து, நீர் எங்களுக்கு அளித்த உண்மையான அன்பும், அமைதியும், ஒற்றுமையும், தழைத்தோங்கிடவும், மக்கள் அனைவரும் மகிழ்ச்சியான வாழ்வு வாழ்ந்திடவும் அருள்புரியும். மேலும் இவ்வுலகில் பசி, பஞ்சம், வறுமை ஒழிந்து, ஏழைகள் ஏற்றம் பெற்றிடவும் மக்கள் புது வாழ்வு அடைந்திடவும் மன்றாடுகின்றோம்.

இறைவா! அகதிகளாகப் பிற தேசத்தில் அல்லப்படும் ஒவ்வொருவரையும் நினைவு கூர்ந்து மன்றாடுகின்றோம். இறைவா நீரே அவர்களுக்குத் துணையாக இருந்து அவர்களைக் காத்திட வேண்டுகிறோம்.

மேலும் இறைவா! நாங்கள் அனைவரும் எங்களது ஆன்மீக வாழ்வில் சிறந்து விளங்கிடவும், நாளுக்கு நாள் எங்களுடைய நம்பிக்கையில் தழைத்தோங்கிடவும், உம்மை மன்றாடுகிறோம். இந்த மன்றாட்டுக்களை எல்லாம் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து

வழியாக இறைஞ்சி மன்றாடுகிறோம் ? ஆமென்.

**பாடல்:** விண்ணப்பத்தைக் கேட்பவரே...
**திருப்பாடல் - 13** (உதவிக்காக மன்றாடல்)
**கன்னிமரியின் பாடல்**
**இறுதி மன்றாட்டு :** மாண்புயர் மற்றும் நற்கருணை ஆசீர்
இயேசு ஆண்டவரே, இயேசு இறைவனே, துதியும், புகழ்ச்சியும் உமக்கே உரியதே ? 3

## புனித வெள்ளி

### முன்னுரை

அன்பு நிறை இறைமக்களே! இன்று நாம் இறைமகன் இயேசுகிறிஸ்துவின் பாடுகளையும் அவரது இறப்பையும் தியானித்துக் கொண்டிருக்கிறோம். இயேசுவினுடைய இந்தப் பாடுகளும், சிலுவை மரணமும் மனிதர்களின் கொடூர உள்ளத்தின் கோரத் தாண்டவங்களை அம்பலப்படுத்துகின்றன. அவரின் உடலைச் சாட்டையால் குதறி, அவரது முகத்தில் காரி உமிழ்ந்து, தலையில் முள் கிரீடமிட்டு, அவமானத்தின் கொலைக் கருவியாகிய சிலுவையை 'சாவுமேடு' வரை சுமந்து செல்ல வைத்து, நிர்வாணப்படுத்தி, ஆணியால் அறைகின்றனர். ஏழை, எளியவர், வறியோர், ஒடுக்கப்பட்டோர், பெண்கள், நோயாளிகள், பாவிகள், போன்ற அனைவரோடும் இயேசு கொண்டிருந்த உறவு, ஆட்சியில் இருந்தவர்களை ஆட்டிப்படைத்தன. இதன் விளைவாகத்தான் இயேசுவுக்கு மரணம் திணிக்கப்பட்டது.

இந்தக் கொடூர, மூர்க்கத்தனமான நிலையிலும் இயேசுவின் மன்னிப்பும், அன்பும் பெருகி, அவமானச் சின்னமான சிலுவை தியாகத்தின் அடையாளமாகிறது.

இன்றைய வழிபாடானது 1. இறைவாக்கு வழிபாடு, 2. திருச்சிலுவை ஆராதனை, 3. திருவிருந்து என்ற மூன்று முக்கிய பகுதிகளைக் கொண்டுள்ளது. இப்போது அருள் பணியாளர் இயேசுவின் மரணத்திற்கு வணக்கம் செலுத்தும் வகையில் தரையில் முகங்குப்புற விழுந்து செபிக்கிறார். நாமும் அவரோடு இணைந்து செபிப்போம். அனைவரும் அமைதியாக எழுந்து நிற்போம்.

### முதல் வாசக முன்னுரை (எ.சா.52.13, 53:12)

இயேசுவின் திருப்பாடுகளைத் தியானித்துக் கொண்டிருக்கும் நாம்

துன்புறும் ஊழியன் வாழ்வில் என்ன நிகழும், வாழ்வு எத்தகையது, அதனால் விளையும் பலன் என்ன என்பதையும், உண்மையான இலட்சிய வாழ்விற்காகத் துன்பத்தை ஏற்க விரும்பிய இயேசு நம் பாவங்களுக்காக நொறுக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்டு, நாம் அனைவரும் நிறைவாழ்வை உரிமையாக்கிக்கொள்வதற்காக, தனது இலட்சியத்தில் தடம் புரளாமல் இருந்தார் என்று தெளிவுப்படுத்தும் இந்த முதல் வாசத்திற்கு நமது செவிகளைத் திறப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை : (எபி 4:14-16, 5:7-9)**

இறைமகன் இயேசு பாவம் தவிர்த்து எல்லா நிலையிலும் நம்மைப் போன்று வாழ்ந்தார். ஆனால் பாவம் தவிர்த்தார். தாழ்ச்சி என்னும் வரத்தை தன் ஆடையாக அணிந்து இறுதிவரை கீழ்ப்படிதல் உள்ளவராகத் திகழ்ந்தார். நாமும் அவரைப் போல் உரத்தக் குரல் எழுப்பி, கண்ணீர் சிந்தி, மன்றாடி எல்லாம் வல்ல இறைவனை நாடுவோம் என்ற உயர் நம்பிக்கையுடன் இந்த வாசகத்திற்குக் கவனமுடன் செவிமடுப்போம்.

**மறையுரை**

எத்தனையோ மக்கள் தம் உயிரைப் பிறருக்காகத் தியாகம் செய்திருக்கிறார்கள், ஆனால் எவரது இரத்தமும் பாவக்கறைகளைக் கழுவியதாக வரலாறு இல்லை. ஆண்டவரின் இரத்தமோ ? பலருடைய பாவங்களுக்காகச் சிந்தப்படும் இரத்தம்? (மத்: 26:29) நம்மை நீதிமான்களாக்கிய இரத்தம், விலைமதிக்கப்படாத இரத்தம். அன்று ஆதாம், ஏவாளின் பாவத்தால் தாறுமாறாக எழுதப்பட்ட நம் தலையெழுத்தை மாற்றியெழுதிய இரத்தம், அதை அழித்து இறைவனோடு நம்மைப் பிணைத்த இரத்தம், இவர் சிந்திய இரத்தத்திற்கும், நாம் ஏற்படுத்திய தழும்புகளுக்கும் நாம் என்ன பரிகாரம் செய்யப்போகிறோம்?.

ஓர் ஊரில் ஒரு விதவைப் பெண்ணுக்கு ஒரு மகன் இருந்தான். அவனை அவள் மிகுந்த பாசத்தோடு வளர்த்து வந்தாள். அவன் வளர்ந்த பின்பு தாயின் அரவணைப்பிலிருந்து விலக ஆரம்பித்தான். காரணம், அவனுடைய தாயின் கைகளில் கண்ட வெண்ணிற தழும்புகள், அதைப்பார்க்க அவனுக்கு அருவருப்பாக இருந்தது.

ஒருநாள் அவன் தன் தாயிடம், “அம்மா உம்மைப் பார்ப்பதற்கே அருவருப்பாக உள்ளது. இந்த வெண்படைகள் உம் கைகளில் எப்படி வந்தன” என்று கேட்டான். அப்போது அந்தத்தாய் கண்ணீருடன்

திரும்பி சிறுவனைப்பார்த்து கூறினாள். “மகனே! நீ சிறுவனாக இருந்தபோது உன்னை வீட்டில் படுக்க வைத்துவிட்டு ஏதோ வேலையாய் வெளியே சென்ற நான், திரும்பி வந்து பார்த்த போது வீடு தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. நான் உன்னைக் காப்பாற்றினேன். அப்போது ஏற்பட்ட தீப்புண்தான் இது” என்றாள். அவன் அந்தக் காயங்களை அன்போடு முத்தமிட்டான்.

ஆம்! இறையேசுவில் பிரியமானவர்களே! நாமும் இன்று பகை, பொறாமை, பேராசை, காம இச்சை மற்றும் பதவி ஆசை என்று நம்முடைய பாவத்தீயினால் இயேசுவை சுட்டெரிக்கின்றோம். அவர் முகத்திலும், உடலிலும் தழும்புகளை ஏற்படுத்தியிருக்கின்றோம்.

எசாயா கூறுவதுபோல், இதோ இன்று இயேசுவின் முகத்தில் மனிதச்சாயலே இல்லை, அழுகுக்கு இலக்கணம் வகுத்து, அழகு நாயகனாக திகழ்ந்தவரிடத்தில் இன்று அழகே இல்லை. மலரொன்றின் இதழ்கள் வாடிவிட்டன. சமாதானப் புறாவின் சிறகுகள் ஒடிந்துவிட்டன. கண்ணொளி தந்தவர்க்குக் கண்ணில் ஒளி இல்லை, எழுந்து நட என்றவர்க்கு இன்று எழுந்து நடக்க முடியவில்லை. நானே உயிர் என்றார் இன்று உயிரற்று காட்சியளிக்கின்றார்.

இவையெல்லாம் நம் பாவத்தின் வெளிப்பாடு என்பதை உணர்ந்து அந்தச்சிறுவனைப்போல அன்போடு முத்தமிட்டு கண்ணீரால் நனைத்து நம் பாவக்கறைகளைப் போக்கிட இந்தப்பெரிய வெள்ளி நம்மை அழைக்கின்றது.

கழுமரத்தில் காய்ப்பும் இல்லை
பூப்பும் இல்லை
எப்படி இங்கே
ஒரு புனித மகன்
இரத்தமாய் பூத்துவிட்டான்
இல்லை, இல்லை இவர்
இரத்தம்பட்டு ? தாகத்தால்
பட்டமரம் தளிர்கொடுக்கும்
செத்த மனிதன் உயிர்பெறுவான்.

## திருச்சிலுவை ஆராதனை

**முன்னுரை :**

அவமானத்தின் சின்னம் என்று அறிந்தும் நம்மீது கொண்ட அளவு கடந்த அன்பால் நம்மை மீட்பதற்காக சிலுவையைத் துணிந்து ஏற்கின்றார், நம் பெருமான் இயேசு. மீட்பரின் கரம் அச்சிலுவை மரத்தில் பட்டதும் அதுவரையில் அது கொண்டிருந்த அவமானத்தின் அடையாளம் என்ற பெயர் மாறி மீட்பரின் அடையாளம், புனித்தின் அடையாளம், தியாகத்தின் அடையாளம் என்றுபெயர் பெற்றது. ஆகவே நாம் அச்சிலுவையை உற்று நோக்கும்போது இயேசுவின் பண்புகள் நம்மில் ஊற்றெடுக்க வேண்டும். எனவே நமக்கு வாழ்வளிக்கும் இச்சிலுவைக்கு நம் ஆராதனையையும், வணக்கத்தையும் செலுத்துவோம்.

# உயிர்ப்பு பெருவிழா

**(பாஸ்கா திருவிழிப்பு வழிபாட்டு நிகழ்ச்சிகள்)**

**திருப்பலி முன்னுரை:**

விதைகளை அடக்கம் செய்தால் அது முளைத்து விடும்

உண்மையை அடக்கம் செய்தால் அது உயிர்த்துவிடும்.

ஆம், இறை இயேசுவில் பிரியமானவர்களே! ? உண்மையை அடக்கி முடக்கி விட்டோம் என்று நினைத்த யூதர்களுக்கு, இயேசுவின் உயிர்ப்பு, உண்மையை யாராலும், எந்தக்காலக்கட்டத்திலும், எந்தச் சூழ்நிலையிலும் அடக்கி, முடக்க முடியாது என்பதைத் தெளிவுப்படுத்துகிறது.

ஆகவே இன்றைய விழா, வீழ்ச்சிக்கு பின் கிடைத்த எழுச்சியின் விழா பொய்மைக்கெதிராக வெற்றியைக் குறித்து காட்டும் மாட்சியின் விழா, சூழ்ச்சியுடன் செயல்படுத்திய திட்டத்தை சுக்கு நூறாக்கிப் போட்ட வெற்றியின் விழா.

கடந்த நாற்பது நாட்கள் செபத்திலும், உபவாசத்திலும், ஒருத்தல் முயற்சியிலும் நம்மையே நாம் ஈடுபடுத்தி இப்பெரு விழாவிற்காக நம்மையே தயார்படுத்தியிருக்கின்றோம். ஆகவேதான், ஆண்டவரின் உயிர்ப்பைக் கொண்டாடி மகிழ இன்று நாம் கூடியிருக்கின்றோம்.

மேலும் இன்றைய வழிபாடு நமக்கு நினைவூட்டுவது என்னவெனில், இலட்சிய வாழ்விலும், நேர்மையான வாழ்விலும்,

பிறரன்பு வாழ்விலும் உண்மைவாழ்விலும் துன்பங்கள் கட்டாயமாக இருக்கும் ஆனால் துன்பங்கள் ஒரு போதும் இலட்சியத்தையோ, உண்மையையோ அடக்கி ஆள முடியாது. இறுதியில் இலட்சியமும், உண்மையும்தான் வெல்லும்.

எனவே, உயிர்த்த ஆண்டவர், நம்மை இலட்சியம் கொண்டவர்களாகவும், உண்மையுள்ளவர்களாகவும் வாழ அழைப்பு விடுக்கின்றார். அப்படி வாழும் போது உயிர்த்த ஆண்டவர், நம்மை இருளிலிருந்து ஒளிக்கும், சாவிலிருந்து வாழ்விற்கும், கடந்து செல்ல நம்மை ஆசீர்வதிப்பார். இயேசுவோடு நாமும் புது வாழ்வு பெற அவரோடு உயிர்த்து மகிழ தொடர்ந்து இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

இன்றைய வழிபாடானது, நான்கு பகுதிகளைக் கொண்டுள்ளது.

1. திரு ஒளி வழிபாடு
2. இறைவார்த்தை வழிபாடு
3. திருமுழுக்கு வழிபாடு
4. நற்கருணை வழிபாடு

இப்பொழுது ஒளி வழிபாடு தொடங்குகிறது. எல்லோரும் தாங்கள் வைத்திருக்கும் ஏற்றப்படாத மெழுகு திரிகளுடன் எழுந்து நிற்போம்.

**ஒளி வழிபாடு**

(இப்போது கோவில் விளக்குகள் அனைத்தும் அணைக்கப்பட்டிருக்கும் புதுத்தீ மந்திரித்தவுடன் இம்முன்னுரை வாசிக்கப்படுகிறது.)

**நானே உலகின் ஒளி ...**

அன்பார்ந்த இறைமக்களே! கடவுள் ஜோதி வடிவமானவர் என்பதை நாம் பலமுறை கேட்டிருப்போம், தியானித்திருப்போம். அந்தச் சிந்தனைகளைப் பழைய ஏற்பாடுகளில் ஒப்பிட்டால் கடவுள் மோசேவை அழைத்தது எரியும் முட்புதரில்; இஸ்ரயேல் மக்களை அடிமைத் தனத்திலிருந்து கூட்டி வந்தது நெருப்பு வடிவில். இயேசுவின் பிறப்பும், அவரது போதனைகளும் கடவுளின் வடிவம் என்பதை மையப்படுத்தியதாகவே அமைகின்றன. இப்போது ஏற்றப்படப் போகும் ஒளி இயேசுவின் உயிர்ப்பை எடுத்துரைக்கும் மறைபொருளாய் அமைந்துள்ளது. இயேசுவே இந்த ஒளி, நமக்காகப் பிறந்த ஒளி, நம் பாவங்களுக்காக இறந்து உயிர்த்த ஒளி. நம்மை இருளின் ஆட்சியிலிருந்து ஒளியின் ஆட்சிக்கும், பொய்மையிலிருந்து மெய்மைக்கும், கூட்டிப்போகும் ஒளி எனவே இந்த வழிபாட்டில்

அமைதியுடன் பங்கெடுப்போம்.

(குறிப்பு: மந்திரிக்கும் சடங்கு முடிந்து அனைவரும் திரிகளைப் பற்றவைத்துக் கொள்கின்றார்கள், இப்போது பவனியாகப் பீடம் நோக்கி செல்வோம், பவனியின் போது “கிறிஸ்துவின் ஒளி இதோ, இறைவா உமக்கு நன்றி!” என்ற பாடல் பாடப்படுகிறது).

**பாஸ்கா புகழுரைக்கு முன்னுரை:**

இறைவன் படைத்த அனைத்தும் தம் அன்பின் வெளிப்பாடாக படைத்தார். அந்தப் படைப்பின் உச்சமாக மனிதரைப் படைத்தார். இறையன்பை உதறி ஆதிப்பெற்றோர், தவறிழைத்தபொழுது இறைவனின் பிரசன்னத்தை விட்டு அகல நேர்ந்தது. இறைவனின் பிள்ளைகள் என்ற உயரிய அந்தஸ்தை இழந்து பாவத்திற்கு அடிமையான தமது மனித பிள்ளைகளை மீட்க இறைவன் தம் ஒரே மகனான இறைமகன் இயேசுவையே இந்த உலகிற்கு அனுப்பினார். தவறிய மனிதனை மீட்க இயேசு சிலுவையையே தம் கருவியாக கொண்டார். சிலுவை வாழ்வின் முடிவாய் அன்று புதிய வாழ்வின் தொடக்கமாய் அமைந்தது. இந்த மீட்பின் வரலாற்றுக் காட்சிகளையே பாடலாகப் பாட இருக்கின்றோம். அனைவரும் பாஸ்கா புகழுரைக்குச் செவி மடுப்போம்.

(**<u>குறிப்பு:</u>** பாஸ்கா புகழுரை பாடப்படுகின்றது. அனைவரும் எரியும் திரியுடன் நிற்கின்றார்கள். பாஸ்கா புகழுரை முடிந்தவுடன் திரிகளை அனைத்துவிட்டு அமருகிறார்கள்)

**வாசகங்களுக்கான முன்னுரை:**

இன்றைய பாஸ்கா திருவிழிப்பு வழிபாட்டில், இறைவார்த்தை வழிபாடு ஓர் முக்கிய அங்கம் வகிக்கின்றது. மீட்பின் வரலாற்றிலே இறைவன் எல்லா வகையிலும், எல்லா நேரத்திலும் தான் தேர்ந்துகொண்ட மக்களோடு துணையிருந்து, அவர்களைச் சிறப்பாக வழிநடத்தியிருக்கின்றார். அதன் மூலம், தேர்ந்து கொள்ளப்பட்ட மக்கள் எகிப்தின் அடிமைத்தளையிலிருந்து விடுவிக்கப்பட்டு, வியத்தகு முறையில் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குச் செல்ல உதவியதையே இன்றைய அனைத்து வாசகங்களும் எடுத்துக் கூறுகின்றன. ஆகவே நாமும் இஸ்ரேயல் மக்கள் போல் இறைவனின் வழித்துணையை நம்பி இருக்கின்றபோது, இறைகரம் நம்முடைய பலவித அடிமைத்தனத்திலுருந்தும், துன்பங்களிலிருந்தும், துயரங்களிலிருந்தும் நம்மைவிடுவிக்கும் என்ற ஆழ்ந்த விசுவாசத்தோடு இந்த வாசகங்களுக்குச் செவிமடுப்போம்.

## மறையுரை

## இயேசுவோடு நாமும் புது வாழ்வுக்கு உயிர்ப்போம் புது வாழ்வு கொடுப்போம்

ஒரு பேருந்து பள்ளத்திலே விழுந்து 34 பேரைக் கொன்றது. அதில் மரகதம் என்பவரின் ஒரே மகன் குமரனும் ஒருவன். இறந்த குடும்பத்திற்குத் தலா 50,000 நஷ்ட ஈடு வழங்கும் விழா நடந்தது. ஆட்சியர் காசோலையைக் கொடுக்க மரகதம்மாளை அழைத்த போது, "எனக்குப்பணம் வேண்டாம். என் மகன் குமரன் சாகவில்லை" என்றாள். எல்லோருக்கும் புரியவில்லை ஒருவேளை மகனை இழந்த மனக்கலக்கத்தில் அறிவிழந்து உளறுகிறாளோ என்று எல்லோரும் நினைத்தனர். "என்னம்மா! இறந்த இவன்தான் என் மகன் என்று அடையாளம் காட்டினீர்களே" என்று சொன்ன போது, மரகதம்மாள் பின்வருமாறு விவரிக்கிறாள்.

"என் மகன் குமரன் பல தடவை இரத்ததானம் செய்திருக்கிறான். அது பலருடைய உடலில் ஓடிக் கொண்டிருக்கிறது.

கடந்த ஆண்டு எந்தப் பிரதி உபகாரமும் எதிர்பாராமல் தன் ஒரு சிறுநீரகத்தைத் தானம் செய்து ஓர் உயிரைக் காப்பாற்றினான்.

விபத்தில் இறந்த என் மகனின் கண்களை எடுத்து ஒரு பெண்ணுக்கும், ஒரு சிறுவனுக்கும் பொருத்தியுள்ளார்கள்.

அவர்கள் எல்லோரும் உயிரோடு இந்தக் கூட்டத்தில் உட்காந்திருக்கிறார்கள். இவர்களில் என் மகன் வாழ்கிறான் என்றார் மரகதம்.

ஆம், இறையேசுவில் பிரியமானவர்களே! வரலாற்றில் பிறருக்கு உயிர்க்கொடுத்தவர்கள், உயிர் கொடுத்துக் கொண்டும் இருக்கிறார்கள் என்பதற்கு இது தகுந்த சான்று.

மரிய மதலேனாவுக்குக் காட்சி கொடுத்தார் இயேசு. ஓடிச்சென்று அறிவித்தாள், தான் கேட்ட செய்தியை. இயேசு நமக்காக உயிர்த்தார் என்ற செய்தியை அறிவிக்க வேண்டும். அப்போதுதான் நாம் நிறைவான மகிழ்ச்சியைக் காணமுடியும்.

இன்றைய நற்செய்தியில் மதலேனாளும் சீடர்களும் வெறுமையான கல்லறையை கண்டு கலக்கமும், குழப்பமும் அடைந்தார்கள்? என்று வாசிக்கிறோம். இந்த வெறுமையான இயேசுவின் கல்லறை நமக்கு கொடுக்கும் மூன்று சிந்தனைகள்:

1. இயேசு நம்முடன் உயிரோடு இருக்கிறார். நமக்கும் உயிர்ப்பு உண்டு.

2. நாமும் நம்மையே வெறுமையாக்க வேண்டும் என்ற உண்மையே உணர்த்துகிறது. ஆகவே உலகமும் அதில் உள்ள அனைத்தும் நிலையற்றவை அழிவிற்குரியவை.

3. உயிர்த்த ஆண்டவர் சீடர்களை நோக்கி உங்களுக்குச் சமாதனம், அஞ்ச வேண்டாம் என்று உரைத்தார். ஆகவே வெறுமையான கல்லறை நாம் உறுதியுடன் தைரியமாக இருக்க அழைப்பு விடுக்கிறது.

**இறுதியாக:**

நாம் எப்படி மற்றவர்களுக்கு உயிர்த்த இயேசுவை வாழ்வாக்கலாம் அல்லது அறிவிக்கலாம் என்றால், மன்னித்துச் சகோதர வாஞ்சையோடு வாழும் போது பகிர்ந்து வாழும் போது, நம்மால் இயன்ற உதவியைச் செய்யும் போது, விசுவாச வாழ்வு வாழும் போது, அநீதியை ஒழித்து நீதியை நிலைநாட்டும் போது, இவ்வாறு நாம் நடந்தால், நம் மூலம் இயேசுவின் உயிர்ப்புச் சாட்சியாகும். அதுவே உயிர்ப்பின் மூலதனம்.

உயிரோடு இருப்பவரைக் கல்லறையில் தேடுவதா?

வாழ்வாய்த் துடித்தவரைச் சாவுதான் கட்டிவைக்குமா?

மண்ணைப் படைத்தவரை மண்தான் அடக்கி வைக்குமா??

ஆம்! தனக்காக வாழ்பவன் இறப்பான் அவன் கல்லறையிலே அடங்கி ஒடுங்கி விடுவான். ஆனால் பிறருக்காக இறப்பவன் வாழ்வான்! மனிதர்களின் உள்ளங்களிலே வாழ்வாக உயிர்ப்பான்.

ஆகவே! இன்று வெற்றி முரசு கொட்டும் இனிய நாள்; சாவு தோல்வி கண்ட நாள்; அநீதியையும், அக்கிரமத்தையும் தகர்த்தெறிந்த நாள்; ஏனெனில் நம் ஆண்டவர் இயேசு உயிர்த்துவிட்டார்.

இந்த உயிர்த்த ஆண்டவர் இயேசுவின் மகிழ்ச்சியை நாம் ஒவ்வொரு நாளும் அனுபவிக்க வேண்டும். ஆனால் இதை நாம் முழுமையாக அடைய என்ன செய்ய வேண்டும்?

நம் பாவ வாழ்க்கைக்குச் செத்தவர்களாகக் கிறிஸ்து இயேசுவுக்குள் கடவுளுக்காக வாழ்கின்றவர்கள் (உரோ 6:11) என எண்ணிக் கொள்ள வேண்டும்.?

ஆம்! பாவ வாழ்க்கையை விட்டால்தான் உயிர்த்த இயேசுவைக் காண முடியும்.

கண்ணால் காணக் கூடிய நம் சகோதரனை நாம் ஏற்று அன்பு செய்ய வேண்டும். அப்போதுதான் கண்ணால் காணமுடியாத அந்த உயிர்த்த ஆண்டவரை நாம் காண முடியும்? (யோவா 4:13.20).

(குறிப்பு: இன்று விசுவாசப் பிரமாணம் சொல்லப்படுவதில்லை)

## திருமுழுக்கு வழிபாடு

**முன்னுரை:**

அன்பார்ந்த இறைச் சமூகமே........ பாவங்களைக் கழுவ நாம் காசிக்கும், பல மதக் கோயில்களுக்கும் சென்றாலும், கடவுளால் மன்னிக்கப்பட்டாலும், நாம் மனம் வருந்தி மன்னிப்பு கேட்காவிடில் நம் பாவங்கள் கழுவப்படா. இந்த திருமுழுக்கு நாம் சிறு வயதிலே நமக்குத் தெரியாமல் பெற்றோரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் இன்றோ நாம் பக்குவமடைந்தவுடன் உண்மையாக மனம் நொந்து இனிமேல் பாவம் செய்வதில்லை என்று உறுதி மொழி எடுத்து மனம் வருந்துவோம்; மன்னிப்பு பெறுவோம். எனவே, முழுமனதோடு இந்த வழிபாட்டில் பங்கெடுப்போம்.

### மன்றாட்டுகள்

**1. திருச்சபையின் தலைவரே எம் இறைவா!**

திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவிகள், இறைமக்கள் அனைவரும் சகோதரத்துவத்தில் திளைத்து, நிறைவாழ்வை நோக்கி வளர்ந்திட வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**2. சாவை வென்று உயிர்த்தெழுந்த எம் இறைவா!**

எம் நாட்டில் அநீதி அழிந்து நீதி தழைக்கவும், வறுமை, வன்முறை ஒழிந்து சமத்துவம், சகோதரத்துவம் மலரவும், பிரிவினைகள் மறைந்து ஒற்றுமை வளரவும், போர்கள் குறைந்து அமைதி நிலவி, மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாக வாழவும், வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**3. பாவத்தை வென்று உயிர்த்தெழுந்த எம் இறைவா!**

இவ்வுலகில் சிற்றின்ப நாட்டங்களினாலும், எங்களின் சுயநல போக்கினாலும், எங்களையே இழந்து, மனம் போன போக்கிலே வாழ்ந்து கொண்டிருக்கும் நாங்கள் தம்நிலை உணர்ந்து, அடுத்தவர் நலனில் அக்கறை கொள்ளும் மக்களாக வாழ்வதற்கு வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**4. இருளை வென்று உயிர்த்தெழுந்த எம் இயேசுவே!**

ஒளியை ஏந்தி எம் திருமுழுக்கைப் புதுப்பிக்கும் நாங்கள் அனைவரும், எங்கள் கிறிஸ்துவ விசுவாசத்தில் பிடிப்புடனும், ஈடுபாட்டுடனும் வாழ்ந்து அனைத்து மக்களுக்கும் ஒளியாக விளங்கிட

வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**5. உறவுக்கு உருக்கொடுத்து உயிர்த்தெழுந்த எம் இயேசுவே!**

எம் குடும்பங்களில் உள்ள உறவு விரிசல்கள், வேண்டா வெறுப்புகள், பிரச்சனைகள், பொருளாதாரச் சிக்கல்கள் எல்லாம் நீங்கி, நாங்கள் ஒவ்வொருவரும் புதிய உள்ளம் படைத்தவர்களாய் உறவிலும், உள்ளத்திலும் மகிழ்ச்சியாக வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

(**குறிப்பு:** நற்கருணை வழிபாடு தொடரும்..)

## உயிர்ப்பு ஞாயிறு திருப்பலி

**திருப்பலி முன்னுரை:**

கிறிஸ்து இயேசுவில் பிரியமானவர்களே! இன்று இறைமகன் இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழாவை மகிழ்ச்சியோடு கொண்டாடி கொண்டிருக்கிறோம். உண்மையில் கிறிஸ்து இயேசுவின் உயிர்ப்புதான் கிறிஸ்துவ வாழ்வின் வித்து. இறந்த இயேசு உயிர்த்து விட்டார், இன்றும் நம்முடன் வாழ்கிறார் என்பதுதான் கிறிஸ்துவச் சமயத்தின் அடிப்படை நம்பிக்கை. இதனால் தான் தூய பவுல் "கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நீங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாகிவிடும்." என்கிறார் (1 கொரி 15:4) இறைவன் மனித வரலாற்றில் உடனிருக்கிறார், மாந்தர் அனைவருக்கும் வாழ்வும், வளர்ச்சியும் அளிக்கும் சக்தியாக என்றும் செயல்படுகிறார் என்னும் உண்மையின் தெளிவான சான்றாக இயேசுவின் உயிர்ப்பையே நாம் கருதுகிறோம். இயேசுவின் உயிர்ப்பை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த இயேசு எனும் தனிமனிதனுக்கு மட்டும் உடைய நிகழ்வாக கிறிஸ்தவம் கருதுவது கிடையாது. மாறாக சாவின் சக்திகளுக்கு முடிவாகவும்.

சமத்துவ சகோதரத்துவ வாழ்வுக்கு விடிவாகவும்

அன்பு பெற்ற வெற்றியின் முழக்கமாகவும்,

புதிய உள்ளங்கள், உறவுகள் மற்றும் உலகின் துவக்கமாகவும் கருதுகிறோம். எனவே புதிய மனிதர்களாய், புனித சமுதாயம் படைத்திட இறைமகன் இயேசுவோடு இணைவோம். இறுதியாகப் பலியின் வழியாக இயேசுவோடு உயர்த்திட தயாராவோம்.

**முதல் வாசக முன்னுரை:**

இன்றைய முதல் வாசகத்தில் தூய பேதுரு இயேசுவைப் பற்றி மக்களிடம் சாட்சி சொல்வதை நாம் காண்கிறோம். மேலும் இயேசுவின் மீட்புப் பணி முழுவதையும் சுருக்கமாக விவரிக்கிறார். அதாவது இயேசு மரித்தார், மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்று சாட்சியம் கூறுகிறார். ஆகவே, எனக்காக மரித்து, உயிர்த்த இயேசுவை என்னுடைய வாழ்விலே எவ்வாறு பிரதிபலிக்கிறேன். எனச் சிந்திக்க தூண்டும் இவ்வாசகத்திற்குக் கவனமுடன் செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை:**

இன்றைய இரண்டாம் வாசகத்தின் மூலம் தூய பவுல் நாம் கிறிஸ்துவோடு உயிர் பெற்று எழுந்தவர்களானால், எதை நாட வேண்டும்? எதை எண்ண வேண்டும்? யாரோடு நாம் ஒன்றித்து இருக்க வேண்டும்? அப்படி இருப்பதால் நமக்கு கிடைக்கும் பலன் என்ன? என்று தெளிவாக கூறுகிறார் இவ்வாசகத்திற்குக் கவனமுடன் செவிமடுப்போம்.

(குறிப்பு : மறையுரை மற்றும் மன்றாட்டுக்கள்
திருவிழிப்பு திருப்பலியிலிருந்து எடுத்துப் பயன்படுத்தலாம்)

## குருத்து ஞாயிறு பாடல்கள்

1. தாவீதின் மகனுக்கு ஓசான்னா
ஆண்டவர் பெயரால் வருகிறவர்
ஆசி நிரம்பப் பெற்றவரே
இஸ்ராயேலின் பேரரசே
உன்னதங்களிலே ஓசான்னா?2

2. எபிரேயர்களின் சிறுவர் குழாம்
ஒலிவக் கிளைகள் பிடித்தவராய்
உன்னதங்களிலே ஓசான்னா
என்று முழங்கி ஆர்ப்பரித்து
ஆண்டவரை எதிர் கொண்டனரே

மண்ணுலகும் அதில் நிறைந்த யாவும் ஆண்டவருடையன
பூவுலகும் அதில் வாழும் குடிகள் யாவரும்

அவர் தம் உடைமையே
ஏனென்றால் கடல்களின் மீது பூவுலகை
நிலை நிறுத்தியவர் அவரே
ஆறுகளின் மீது அதை நிலை நாட்டியவர் அவரே

ஆண்டவர் மலைமீது ஏறிச் செல்லத் தகுதியானவன் யார்?
அவரது திருத்தலத்தில் நிற்கக் கூடியவன் யார்?
மாசற்ற செயலின் தூய உள்ளத்தினன் பயனற்றதில்
மனத்தைச் செலுத்ததாதவன்
தன் அயலானுக்கு எதிராக வஞ்சகமாய் ஆணையிடாதவன்.

3. ஆயிரக்கணக்கான வருடங்களாய் ? எம்
ஆண்டவரே உம்மைஎதிர்பார்த்தோம்
இஸ்ராயேல் சனங்களை ஆளவரும் ? எம்
இயேசு இரட்சகரே எழுந்தருள்வீர்
ஓசான்னா தாவீதின் புதல்வா ஓசான்னா ஓசான்னா ஓசான்னா

மாமரி வயிற்றினில் பிறந்தவரே
மாமுனி சூசை கரங்களில் வளர்ந்தவரே
மானிட குலத்தினில் உதித்தவரே எம்
மன்னவரே எழுந்தருள்வீரே ? ஓசான்னா

தாவீது அரசரின் புத்திரரே ஒரு தெய்வீக முடியோடு வந்தவரே
தருமர் எனப் புகழ் அடைந்தவரே எம்
தேவனே தேவனே வருவீரே ? ஓசான்னா

4. ஆண்டவர் புனித நகரத்தில்
நுழைகையில் எபிரேயச் சிறுவர் குழாம்
உயிர்த்தெழுதலை அறிவித்தவராய்
குருத்து மடல்களை ஏந்தி நின்று
உன்னதங்களிலே ஓசான்னா என்று மகிழ்வுடன் ஆர்ப்பரித்தார்.
எருசலேம் நகருக்கு இயேசுபிரான்
வருவதைக் கேட்ட மக்களெல்லாம்
அவரை எதிர் கொண்டழைத்தனரே

5. என் இறைவா என் இறைவா
ஏன் என்னைக் கைநெகிழ்ந்தீர்?
என்னைப் பார்ப்போர் எல்லாரும் என்னை
ஏளனம் செய்கின்றனர்
உதட்டைப் பிதுக்கி தலையை அசைக்கின்றனர்
ஆண்டவர் மீது நம்பிக்கை வைத்தானே அவர் மீட்கட்டும்
அவருக்கு இவன்மீது பிரியமிருந்தால்
இவனை விடுவிக்கட்டும் என்றார்கள்
ஏனெனில் பல நாய்கள் என்னைச் சூழ்ந்து கொண்டன
பொல்லாதவர்கள் கூட்டம் என்னை வளைத்து கொண்டது
என் கைகளையும் கால்களையும் துளைத்தார்கள்
என் எலும்புகளையெல்லாம் நான் எண்ணிவிட முடியும்
அவர்களோ என்னைப் பார்க்கிறார்கள் பார்த்து அக்களிக்கிறார்கள்
என்னை விட்டுத் தொலைவில் போய் விடாதேயும்
எனக்குத் துணையான நீர் எனக்கு
உதவி புரிய விரைந்து வாரும்.

6. கிறிஸ்து தம்மைத் தாழ்த்தி (நற்செய்திக்கு முன்)
சாவை ஏற்கும் அளவுக்கு ? அதுவும்
சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்படிபவரானார்
ஆதலால் தான் கடவுள் அவரை
எல்லாருக்கும் மேலாய் உயர்த்தி
எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்
தூய வியாழன் பாடல்கள்

7. நாம் ஆசிர்வதிக்கும் கிண்ணம்
கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்கு கொள்வதன்றோ!
ஆண்டவர் எனக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும்
நான் என்னை கைம்மாறு செய்வேன்அதற்கு!
மீட்புக்காக நன்றி கூறிக் கிண்ணத்தைக் கையில் எடுத்து
ஆண்டவருடைய திருப்பெயரைச் சொல்லி கூப்பிடுவேன்
ஆண்டவர் தம் அடியாரின் மரணம்
அவருடைய பார்வையில் மிக மதிப்புக்குரியது
நான் உம் அடியேன் உம் அடியான் மகன்
என் கட்டுகளை நீர் அவிழ்த்து விட்டீர்

8. ஆண்டவரே நீரோ என் பாதங்களைக் கழுவுவது?
அதற்கு இயேசு நான் உன் பாதங்களைக் கழுவாவிடில்
உனக்கு என்னோடு பங்கில்லை என்றார்
சீமோன் இராயப்பரிடம் அவர் வரவே
இராயப்பர் அவரை நோக்கிச் சொன்னது
ஆண்டவரே நீரோ என் பாதங்களைக் கழுவுவது?
அதற்கு இயேசு நான் உன் பாதங்களைக் கழுவாவிடில்
உனக்கு என்னோடு பங்கில்லை என்றார்.
நான் செய்வது இன்னதென்று
உனக்கு இப்போது தெரியாது, பின்னரே விளங்கும்
ஆண்டவரே நீரோ என் பாதங்களைக் கழுவுவது?
அதற்கு இயேசு நான் உன் பாதங்களைக் கழுவாவிடில்
உனக்கு என்னோடு பங்கில்லை என்றார்.

9. புதியதோர் கட்டளை உங்களுக்குத் தருகின்றேன்
உங்களுக்கு நான் அன்பு செய்தது போலவே
நீங்களும் ஒருவருக்கொருவர் அன்பு செய்யுங்கள்
என்றுரைக்கின்றார் எம்பெருமான் இயேசு

10. அன்பும் நட்பும் எங்குள்ளதோ
அங்கே இறைவன் இருக்கின்றார்
கிறிஸ்துவின் அன்பு நம்மைஎல்லாம்
ஒன்றாய்க் கூட்டிச் சேர்த்ததுவே
அவரில் அக்களித்திடுவோம் யாம்
அவரில் மகிழ்ச்சி கொள்வோம்
ஜீவிய தேவனுக்கஞ்சிடுவோம் அவருக்கன்பு செய்திடுவோம்
நேய உள்ளத்துடனே யாம் ஒருவரை ஒருவர் நேசிப்போம்.

## தூய வெள்ளி பாடல்கள்

11. தந்தையே உம் கையில் என்
ஆவியை ஒப்படைக்கின்றேன்
உம்மிடம் அடைக்கலம் புகுகின்றேன்
ஒரு போதும் ஏமாற விடாதேயும்

இறை நீதியால் என்னை விடுவிப்பீரே
எனை மீட்பீர் சொல் தவறாதவா
எதிரிகள் அனைவரின் பழிச் சொல்லுக்கும்
என் அயலான் நகைப்பினிற்கும்
அறிந்தோ அனைவரின் அச்சத்திற்கும்
ஆளானேன் தக்க இலக்கானேன்

12. எனது சனமேநான் உனக்கு
என்ன தீங்கு செய்தேன்? சொல்
எதிலே உனக்குத் துயர் தந்தேன்?
எனக்குப் பதில் நீ கூறிடுவாய்
எகிப்து நாட்டில் நின்றுன்னை மீட்டுக் கொண்டு வந்தேனே
அதனாலோ உன் மீட்பருக்குச் சிலுவை மரத்தை நீ தந்தாய்?
நான் உனக்காக எகிப்தியரை அவர்தம்
தலைச்சன் பிள்ளைகளை வதைத்து ஒழித்தேன்
நீ என்னைக் கசையால் வதைத்துக் கையளித்தாய்
பாரவோனைச் செங்கடலிலாழ்த்தி
எகிப்தில் நின்றுன்னை விடுவித்தேன்
நீயோ என்னைத் தலைமையாம்
குருக்களிடத்தில் கையளித்தாய்
நானே உனக்கு முன்பாகக் கடலைத்திறந்து வழி செய்தேன்
நீயோ எனது விலாவை ஓர் ஈட்டியினாலே திறந்தாயே

13. ஆணி கொண்ட உன் காயங்களை நான்
அன்புடன் முத்தி செய்கின்றேன்
உந்தன் மேனி கொண்ட காயம் எந்தன் பாவ வாழ்வின் சாபம்
இனி வாழும் காலம் மாற்றியமைப்பேன்
உறுதி கொண்டேன் தெய்வமே
பழகிப் போன பாதை வழியே மனது இன்றும் செல்லுது
பாவ வாழ்வே பசுமையாக கண்ணில் இன்றும் தெரியுது
எந்தன் பாவம் ஆணியாக உந்தன் மேனிவாடுது
பரிகாரம் செய்து உறவை வளர்க்க
உறுதி கொண்டேன் தெய்வமே
ஒளியின் தேவன் உலகிற்கு இருந்தும்
பார்வை இருண்டு போகுதே

அறிவின் சுவையோ அருகில் இருந்தும்
பாலை நிலமாய் தெரியுது
எந்தன் பாவம் ஆணியாக உந்தன் மேனிவாடுது
பரிகாரம் செய்து உறவை வளர்க்க
உறுதி கொண்டேன் தெய்வமே

14. பாடுகள் நீர் பட்ட போது பாய்ந்து ஓடிய இரத்தம்
கோடி பாவம் தீர்த்து மோட்சம் கொள்ளுவிக்க வல்லதே
கெட்டுப் போனோம் பாவியானோம் கிருபை செய் நாதனே
மட்டிலாக் கருணை என் மேல் வைத்திரங்கும் இயேசுவே
துட்ட யூதர் தூணினோடு தூய கைகள் காட்டியே
கட்டமாய் அடித்த போது காய்ந்த செந்நீர் எத்துணை
சென்னிமேற் கொடிய யூதர் சேர்த்து வைத்த முள்முடி
தன்னால் வடிந்த ரத்தத்தால் சாவான பாவம் நீங்குமே
ஐந்து காயத்தால் வடிந்த அரிய ரத்தத்தினால்
மிஞ்சும் எங்கள் பாவம் தீர்க்க வேண்டுகின்றோம் இயேசுவே

15. கல்வாரிக்குப் போகலாம் வாரீர் ?2 என்
காருண்ய இயேசுவின் காட்சியை பார்த்திட
பொல்லாப் பகைவர் கூட்டம் எல்லாம் திரண்டு அங்கே
நல்லாயன் மீட்பதனைக் கொல்லும் வாதை காண(2)
சிவப்பங்கி தரித்தோராய் சிரசில் முள்முடி பூண்டு
தவத்தில் உயர்ந்த ஞானன் தவிக்கும் முகத்தைப் பார்க்க(2)
பாரச் சிலுவை தனைத் தோளில் சுமந்து ? மிகக்
கொடுமையாய் இருக்கின்ற கொடூரத்தைப் பார்த்திட(2)

16. கல்வாரி மலைமேலே கள்வர்களின் நடுவினிலே
கனிவுள்ள முகம் பார்த்தேன் ? அது
கர்த்தரின் முகமன்றோ அது கடவுளின் முகமன்றோ
தேகமெல்லாம் இரத்தமயம் திணறுகின்றார் மூச்சுவிட
தாகம் தாகம் என்கிறார் தண்ணீர் கொடுக்க யாருமில்லை
அழுவதற்கோ ஆடகளில்லை அணைப்பதற்கோ கரங்களில்லை
அப்பா தந்தாய் என்கிறார் ஐயோ பாவம் தேவமைந்தன்.

17. சிலுவை மரமேசிலுவை மரமே
உன்னை நான் முத்தி செய்கிறேன்(2)
இறைவன் இயேசு உன்னைச் சுமக்க
என்ன தவம் செய்தாய்?2
பாவச் சுமையின் சின்னமாக உன்னைச் சுமந்த இயேசுவே?2
புதிய வாழ்வின் புனிதமாக உன்னை உயர்த்திவிட்டார்?2
ஆணி கொண்டு உன்னில் அறைந்து
உயிரைமீட்டார் இயேசுவே?2
மேனி வழிந்த குருதி நனைந்து புனிதமானாய் சிலுவையே?2
இறைவன் வார்த்தை இறந்த விதமும் அடிமைக் கோலக் காட்சியே?2
நிகழ்ந்ததனைத்தும் சிகரமாக உன்னில் முடிந்தது மாட்சியே?2
தலையைச் சாய்த்து உயிரை நீக்க
அன்னை மடியும் இல்லையே?2
கரங்கள் விரித்து உம்மில் மரித்தார்
புனிதமானாய் சிலுவையே?2

## உயிர்ப்புப் பாடல்கள்

18. உமது ஆவியை விடுத்தருளும்
ஆண்டவரே பூமியின் முகத்தைப் புதுப்பித்தருளும்
நெஞ்சே! உன் ஆண்டவரை வாழ்த்துவாயாக
ஆண்டவரே என் இறைவா நீர் எத்துணை உயர்ந்தவர்
மாண்பும் மகத்துவமும் நீர் அணிந்திருக்கின்றீர்
பூமியை நீர் அடித்தளத்தின் மீது அமைத்தீர்
அது எந்நாளும் அசையவே அசையாது
கடல்களை உடையெனத் தந்திருக்கின்றீர்
வெள்ளப் பெருக்கு மலைகளை மூடியிருக்கும்படி செய்தீர்

19. ஆண்டவர் மாண்புடன் புகழ் பெற்றார்
எனவே அவரைப் பாடிடுவோம் (2)
1) குதிரை வீரனைக் குதிரையுடன்
அவரே கடலில் ஆழ்த்தி விட்டார்
எனக்கு மீட்பாய் அவரே என்
துணையும் காவலும் ஆயினாரே
2) இறைவன் எனக்கு இவர் தானே

இவரையே போற்றி புகழ்ந்திடுவேன்
என் முன்னோரின் இறைவன் இவர்
இவரை ஏற்றிப் புகழ்ந்திடுவேன்.

20. உயிர்த்தார் கிறிஸ்து உயிர்த்தார் ? இந்த
உலகையே உய்த்து விட்டார்
வென்றார் கிறிஸ்து வென்றார் ? இன்று
அலகையை வென்று விட்டார்
ஆர்ப்பரிப்போமே? 2 ஆனந்திப்போமே? 2
அல்லேலூயா பாடுவோம்.
மரணத்தை வென்ற மாவீரன்
மனுக்குலம் மீட்ட இறை மைந்தன்
கல்லறை விட்டு உயிர்த்தெழுந்தார்
கவலைகள் நமக்கு இனி இல்லை (உயிர்த்தார்)
மரணத்தைக் கண்டும் பயமில்லை
மாபரன் இயேசு உயிர்த்து விட்டார்
பேயின் தலையை மிதித்து விட்டார்
பிணக்குகள் எல்லாம் போக்கிவிட்டார் (உயிர்த்தார்)

